**DP/GIT/2025/01**

எனது எண்: 6/10/GIT/2025
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.
2025 மே மாதம் 30

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

**பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை – 2025**

மேற்படி ஆண்டிற்குரிய பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்குத் தேவையான விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2025 மே மாதம் 30 ஆம் திகதியிலிருந்து 2025 ஜூன் மாதம் 13 ஆம் திகதி வரை** விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் இச்சந்தர்ப்பம் மீண்டும் நீடிக்கப்படமாட்டாது.

1. **விண்ணப்பித்தல்**

நிகழ்நிலை முறைமையில் (online) மட்டும் விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தவும். விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்,

- உத்தியோகபூர்வ (https://donets.lk) எனும் வலைத்தளத்தில் நுழைந்து "எமது சேவை" என்பதின் கீழுள்ள "Exam Information Centre" ஐ Click செய்த பின்னர் GIT – 2025 Students Registration (School) Click செய்வதன் மூலமோ அல்லது https://onlineexams.gov.lk/eic ஊடாகவோ பிரவேசிக்கவும்.
- தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள School Code, Password ஐ உள்ளடக்கி முறைமைக்குள் நுழைக.
- உங்கள் பாடசாலைக்கு வழங்கப்பட்ட School Code, Password தொலைத்திருப்பின் உரிய வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்க

2. 2025 ஆம் ஆண்டில் தரம் 12 இல் கல்வி பயிலும் (2026 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.தர)த்தில் முதற்தடவையாக பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் விண்ணப்பங்களில் மட்டும் உங்கள் கவனத்தை செலுத்தவும்.

3. விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது பிழையின்றி சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழிமூலத்தை எக்காரணத்திற்காகவேனும் பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதனால் முதற் சந்தர்ப்பத்திலேயே இவற்றைப் பிழையின்றிப் பூரணப்படுத்துதல் அதிபரினதும் ஆசிரியரினதும் பொறுப்பாகும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

4. தரவிறக்கம் செய்தல்

தரவிறக்கம் செய்த பின்னர் அச்சுப் பிரதியெடுத்த விண்ணப்பப்படிவத்தில் அதிலுள்ள சகல விவரங்களும் சரியானவை என உறுதிசெய்து விண்ணப்பதாரியிடம் கையொப்பம் பெற்றுக் கொள்வதுடன் அவசியமேற்படுமிடத்து மட்டும் திணைக்களத்துக்கு சமர்ப்பிப்பதற்காக பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். நிகழ்நிலை முறைமைக்குள் தரவுகளை உள்ளடக்கிய பின்னர் தரவிறக்கம் செய்யப்பட்ட PDF பிரதியையும் உங்களால் தயாரிக்கப்பட்ட Excel கோவையையும் ஒப்பிட்டுப் பார்த்து சகல விண்ணப்பதாரிகளினதும் சகல விவரங்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்வது அதிபர்களினதும் பொறுப்பாசிரியரினதும் முழுப்பொறுப்பாகும்.

5. விசேட தேவைகளுடைய விண்ணப்பதாரிகள்

உங்களுடைய பாடசாலையிலிருந்து பார்வைக் குறைபாடு/ செவிப்புலன் குறைபாடு அல்லது வேறு விசேட தேவைகளுடைய விண்ணப்பதாரிகள் இருப்பின் அவர்களுக்காக **"Special Education Needs Students' Additional Data"** இல் go to data form என்பதை click செய்து அங்கு கேட்கப்பட்டுள்ள விவரங்களைப் பூரணப்படுத்துதல் வேண்டும். இவ்வாறான விசேட கல்வித் தேவையுடைய பிள்ளைகளுக்கான,

- பார்வையற்றோர் பாடசாலை, இரத்மலானை
- பார்வையற்றோர்/ செவிப்புலனற்றோர் பாடசாலை பொலம்மாறுவ, தங்காலை

விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படுமாதலால் அப் பரீட்சை நிலையங்களில் எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகள் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தவும்.

6. ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :

இப்பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் தத்தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்தின்போதும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திம் சமர்ப்பிக்கலாம். வேறு எந்த ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆகையினால் நேரகாலத்துடன் மாணவர்கள் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது பாடசாலை அதிபரின் பொறுப்பாகும்.

பரீட்சை ஆணையாளர்
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பும் பெறுபேறும்
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
த.பெ.இல 1503, கொழும்பு

மின்னஞ்சல் முகவரி : gitexams524@gmail.com

தொலைபேசி இலக்கம் : 011-2784208, 011-2784537, 0112785922
தொலைநகல் இலக்கம் : 011-2784422
நிகழ்நிலை அலகு : 011-3661122/0113671568

இது தொடர்பாக நீங்கள் வழங்கும் ஒத்துழைப்புக்கு மிக உயர்ந்த மதிப்பளிக்கின்றேன்.

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்

பிரதிகள் : 01. சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் - த.அ.கொ
02. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் - த.அ.கொ